**கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்**

முன்னிலை : திருமதி.G.ரேஷ்மா, பி.எஸ்.சி.. பி.எல்.,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் தேதி திங்கட்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.284/2019**

(CNR No. TNPB02-005679-2019)

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
அரும்பாவூர் காவல் நிலையம்,
குற்ற எண்.99/2019 ... குற்ற முறையீட்டாளர்

/எதிர்/

கருணாநிதி, வயது 34/2019,
த/பெ.கோவிந்தராஜ்,
அம்பேத்கார் தெரு,
வெங்கலம்,
வேப்பந்தட்டை தாலுகா,
பெரம்பலூர் மாவட்டம். ... எதிரி

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 07.04.2021ம் தேதியிட்ட R.O.C.No.814/2020/ RG /F1 ன் படி இவ்வழக்கில் கீழ்க்கண்ட விவரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.)

| வ. எண் | பொருள் | விவரம் | |
|---|---|---|---|
| 1. | குற்றம்சாட்டப்பட்டவர் / எதிரி நீதிமன்ற காவலில் வைக்கப்பட்ட காலம் | (எதிரி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்படவில்லை) | |
| | | காவலில் வைக்கப்பட்ட தேதி | விடுவிக்கப்பட்ட விவரம் & தேதி |
| | | 13.05.2019 | 13.05.2019(SB) |
| 2. | நீதிமன்றத்தில் புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | 27.06.2019 | |
| 3. | அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கினை சமர்ப்பித்த தேதி | இல்லை | |
| 4. | குவிமுச பிரிவு 240 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரிடம் / எதிரியிடம் விசாரிக்கப்பட்ட தேதி | 240 Crpc on நாள் :24.11.2021 | |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட | M.P.No. 12/2026, Dt. 11.03.2026 – U/s.311 of Cr.P.C Petition–Allowed | |



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:03:13 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | அனைத்து மனுக்களின் (குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தவிர) மீதான உத்தரவு விபரம் (இந்நீதிமன்றத்தில் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டில் மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய உத்தரவு உட்பட) | M.P.No. 02/2024, Dt.03.06.2024<br>M.P.No. 10/026, Dt.02.02.2026-<br>Surrender Petition-Accepted.<br>Crl.M.P.No. 344/2026, Dt.11.03.2026-<br>U/s.320 of Cr.P.C Petition-Dismissed.<br>M.P.No. 03/2024, Dt.03.06.2024<br>M.P.No. 09/2026, Dt.02.02.2026-<br>Advance hearing petition-Allowed.<br>M.P.No. 04/2024, Dt.03.06.2024<br>M.P.No. 01/2026, Dt.02.02.2026-<br>U/s. 70(2) of Cr.P.C Petiiton-Allowed.<br>M.P.No. 01/2024, Dt.03.06.2024<br>U/s. 27(2) of Cr.P.C Petition-Allowed. | | |
| 6 | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதி | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1<br>அ.சா.2 | 11.03.2026<br>11.03.2026 | 11.03.2026<br>11.03.2026 |
| 7 | எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(b)-இன் கீழ் வினா வினவப்பட்ட தேதி | 16.03.2026 | | |
| 8. | எதிரி தலைமறைவு குறித்த விபரம் மற்றும் எதிரி ஆஜர்படுத்தப்பட்ட/ தோன்றிய விபரம் | தலைமறைவு ஏதும் இல்லை | | |
| 9. | இவ்வழக்கில் மேலமை நீதிமன்றம் பிறப்பித்த தடை உத்தரவு ஏதேனும் இருப்பின் அது குறித்த விவரம் | தடை உத்தரவு ஏதும் இல்லை | | |

இவ்வழக்கானது 04.07.2019 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள்வரை விசாரணையில் இருந்து வந்து 16.03.2026 ஆம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது அரசுத் தரப்பில் கற்றறிந்த கூடுதல் குற்றவியல் பொது வழக்கறிஞர் திரு.சண்முகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.கலியபெருமாள் அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

## தீர்ப்புரை

### அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:

1. கடந்த 11.05.2019-ம் தேதி 17.00 மணியளவில் இவ்வழக்கின் புகார்தாரர் சுந்தரியும் புகார்தாரரின் மகளும் வீட்டிற்கு வெளியே நின்றிருந்தபோது அங்கு சென்ற எதிரி புகார்தாரரின் மகளை பார்த்து ஏ தேவிடியா வீட்டுக்கு வந்து உன் பாத்திரங்களை எடுத்துக்கிட்டு போடினு அசிங்கமாக திட்டியும், புகார்தாரரின் மகளை கையால்


RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:03:19 +0530

அடித்தும், தடுக்க சென்ற புகார்தாரரையும், புகார்தாரரின் மகளையும் இரும்பு ஊதாங்குழலால் அடித்தும் புகார்தாரரின் மகளுக்கு சாதாரண காயத்தையும் புகார்தாரருக்கு கொடுங்காயத்தையும் எதிரி ஏற்படுத்தியுள்ளார் என்றும் எனவே எதிரியின் செய்கையானது இ.த.ச. 294(b), 323, 326 r/w Sec 4 of TNPHW Act ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அரும்பாவூர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 207 இன் கீழ் நகல் வழங்குதல்**

2. இந்நீதிமன்றத்தால் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, இந்நீமன்றத்தில் முன்னிலையான எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207 இன்படி அரசுத் தரப்பில் வழக்கு ஆவணங்களின் நகல்களை இலவசமாக வழங்கப்பட்டது.

**குற்றச்சாட்டுக்கள் வனைந்து குற்றம் பற்றி வினவுதல்**

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, எதிரி மீது இ.த.ச. 294(b), 324, 326 மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 (2 எண்ணிக்கைகள்) ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றங்கள் குறித்து, வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை எனவும் வழக்கு விசாரிக்கபட வேண்டும் என்று கோரியதால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**அரசுத் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விவரம்**

4. அரசுத் தரப்பில் அ.சா.1, அ.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசுத்தரப்பில் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் :–**

5. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 சுந்தரி தனது நீதிமன்ற சாட்சியத்தில் இந்த வழக்கு சம்பவம் குறித்து எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டேன் என்றும் மேல்நடவடிக்கை வலியுறுத்தவில்லை என்றும் சம்பவம் நடந்த நாள், மாதம், வருடம் தனக்கு ஞாபகமில்லை என்றும் மருத்துவமனையிலிருந்த போது போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் அதில் உள்ள அ.சா.ஆ.1 கையெழுத்து தன்னுடையது தான் சாட்சி தனபாக்கியம் பிழைப்பு நிமித்தமாக வெளியூரில் வேலை செய்து வருவதால் அவரால் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலவில்லை



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:03:25 +0530

என்றும் சாட்சி தனபாக்கியம் தன்னுடைய மகள் என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் கூறி அரசுத் தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

6. அ.சா.2 அம்பேத்கார், தலைமை காவலர் தனது சாட்சியத்தில் கடந்த 13.05.2019 ம் தேதி அன்று அரும்பாவூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக செந்தமிழ்ச்செல்வி என்பவர் பணியிலிருந்தார் என்றும் அவர் தற்போது பணிமாறுதல் பெற்று வேறுமாவட்ட காவல் நிலையத்தில் பணி செய்து வருவதாலும் தரப்பினர் தங்களுக்குள் சமாதானம் ஆகிவிட்டதாலும் இவ்வழக்கை விரைந்து முடிக்க வேண்டி மேற்படி நபருக்காக கோப்புகளின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் கடந்த 13.05.2019 ம் தேதி உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பிலிருந்தபோது பெரம்பலூர் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று அ.சா.1 யை விசாரித்து அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து அதனை பரிசீலனை செய்து அரும்பாவூர் காவல் நிலைய குற்ற எண் 99/2019 இதச பிரிவுகள் 294(b), 323, 324 ன்படி அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும் பின்னர் உதவி ஆய்வாளர் சம்பவயிடம் சென்று சாட்சிகள் செந்தில்குமார், சசிக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் குறித்து அ.சா.ஆ.4 பார்வை மகஜர், அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும் பின்னர் சாட்சிகள் சுந்தரி, தனபாக்கியம், கனகா, கண்ணகி, செந்தில்குமார், சசிக்குமார் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் இவ்வழக்கின் எதிரியை கடந்த 13.05.2019 ம் தேதியன்று கைது செய்து தக்க காவல்நிலையத்தில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும் அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரேவந்த் என்பவரை விசாரணை செய்து அ.சா.ஆ.6, அ.சா.ஆ.7 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் இரண்டு பெறப்பட்டது என்றும் பின்னர் சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் அ.சா.ஆ.8 சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது என்றும் எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 323, 326 r/w 4 of TNPHW Act ன்படி கடந்த 31.05.2019 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

**குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 313 (1) (ஆ)இன் கீழ் வினவுதல்**

7. அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.தொ. பிரிவு 313 (1)

(ஆ)இன் கீழ் எதிரியிடம் விளக்கிக் கூறி வினவியபோது எதிரி அவற்றை மறுத்துரைத்துள்ளார். மேலும் எதிரி தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்து எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>அரசுத் தரப்பு வாதம்</u>**

8. அரசுத்தரப்பு வழக்கறிஞர் அவர்களால் அ.சா.1, அ.சா.2 ஆகிய சாட்சிகள் மூலமும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, சாட்சியங்களின் அடிப்படையில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று வாதிட்டார்.

**<u>எதிரி தரப்பு வாதம்</u>**

9. இதனை மறுத்து எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட புகார்தாரரான அ.சா.1 பிறழ் சாட்சி ஆகிவிட்டார் என்றும், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் யாரும் அளிக்கவில்லை என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்து உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

10. இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு</u>**

11. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.கடந்த 11.05.2019-ம் தேதி 17.00 மணியளவில் இவ்வழக்கின் புகார்தாரர் சுந்தரியும் புகார்தாரரின் மகளும் வீட்டிற்கு வெளியே நின்றிருந்தபோது அங்கு சென்ற எதிரி புகார்தாரரின் மகளை பார்த்து ஏ தேவிடியா வீட்டுக்கு வந்து உன் பாத்திரங்களை எடுத்துக்கிட்டு போடினு அசிங்கமாக திட்டியும், புகார்தாரரின் மகளை கையால் அடித்தும், தடுக்க சென்ற புகார்தாரரையும், புகார்தாரரின் மகளையும் இரும்பு ஊதாங்குழலால் அடித்தும் புகார்தாரரின் மகளுக்கு சாதாரண காயத்தையும் புகார்தாருக்கு கொடுங்காயத்தையும் எதிரி ஏற்படுத்தியுள்ளார் என்றும் எனவே எதிரியின் செய்கையானது இ.த.ச. 294(b), 323, 326 r/w Sec 4 of TNPHW Act ஆகிய

Judicial Magistrate, Additional Mahila Court
RESHMA
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:03:38 +0530

பிரிவுகளின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ளது. எதிரிகள் தரப்பில் அரசுத் தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இருதரப்பு வாதங்களின் அடிப்படையில் பின்வருமாறு எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தீர்வு காணப்படுகிறது.

**<u>இந்திய தண்டணைச் சட்டப்பிரிவு 294(பி)–ன் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

12. இந்த வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீது பொது இடத்தில் வைத்து புகார்தாரரான அ.சா.1 ன் மகளை ஆபாசமாகத் திட்டியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 294(பி)–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1 தனது சாட்சியத்தில் புகார்தாரரான அ.சா.1 ன் மகளை எதிரி பொது இடத்தில் மற்றவர்களுக்கு தொந்தரவு தரும் வகையில் அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டியதாக எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, எதிரி மீதான இ.த.ச பிரிவு 294(பி)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இந்திய தண்டணைச் சட்டம் 324 பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

13. இந்த வழக்கில் அரசு தரப்பில் எதிரி புகார்தாரரின் மகளை இரும்பு ஊதாங்குழலால் குற்றமுறு எண்ணத்துடன் தன்னிச்சையாக அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியுள்ளதாக எதிரி மீது இ.த.ச.பிரிவு 324–ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 324–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1 தனது சாட்சியத்தில் அ.சா.1 ன் மகளை எதிரி தாக்கி சொற்பக்காயம் ஏற்படுத்தியதாக எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, எதிரி மீதான இ.த.ச பிரிவு 324–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இந்திய தண்டணைச் சட்டம் 326 பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:03:44 +0530

14. இந்த வழக்கில் அரசு தரப்பில் எதிரி புகார்தாரரை இரும்பு ஊதாங்குழலால் குற்றமுறு எண்ணத்துடன் தன்னிச்சையாக அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளதாக எதிரி மீது இ.த.ச.பிரிவு 326–ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 326–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1 தனது சாட்சியத்தில் தன்னை எதிரி தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியதாக எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, எதிரி மீதான இ.த.ச பிரிவு 326–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இந்திய தண்டணைச் சட்டப்பிரிவு தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 –ன் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும்:**

15. எதிரி அ.ச.1 மற்றும் அ.சா.1 ன் மகளை இரும்பு ஊதாங்குழலால் அடித்து பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் அவருக்கெதிராக குற்றவியல் பலத்தை பயன்படுத்தியதாக தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 இன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டு குறித்து பரிசீலித்து பார்க்கையில், அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரி அ.சா.1 மற்றும் அ.சா.1–ன் மகளுக்கு எதிராக பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் குற்றவியல் பலத்தை பயன்படுத்தியதாக எதுவும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, எதிரி மீதான தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 – இன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. மேற்கண்ட விரிவான பரிசீலனையின் அடிப்படையில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனடிப்படையில் எதிரி மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

17. முடிவில், எதிரி மீதான இ.த.ச. 294(b), 324, 326 மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 (2 எண்ணிக்கைகள்) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளை அரசுத் தரப்பில் தகுதிநிலை ஐய்யப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிருபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் எதிரியை மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேலும், எதிரி எழுதிக் கொடுத்துள்ள பிணையப்

RESHMA
Judicial Magistrate,
Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:03:49 +0530

பத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் உத்தரவிடுவதற்கு வழக்குச் சொத்து எதுவும் இல்லை என்பதால் அதற்கான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப்பார்த்து, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 16.03.2026 ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.03.16 19:03:55 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

**I. அரசுத் தரப்பு சாட்சிகள் :-**

1. அ.சா.1 – சுந்தரி
2. அ.சா.2 – அம்பேத்கார்(தலைமை காவலர்)

**II. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் :-**

1. அ.சா.ஆ.1 – புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம்
2. அ.சா.ஆ.2 – புகார் வாக்குமூலம்
3. அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை
4. அ.சா.ஆ.4 – பார்வைமகஜர்
5. அ.சா.ஆ.5 – மாதிரிவரைபடம்
6. அ.சா.ஆ.6 – விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று(சுந்தரி)
7. அ.சா.ஆ.7 – விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று(தனபாக்கியம்)
8. அ.சா.ஆ.8 – சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**III. அரசுத் தரப்பு சான்று பொருள் :-** இல்லை

**IV.எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்று பொருள் :-** இல்லை

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.03.16 19:04:01 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

<u>குறிப்பு</u>

1. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

2. எந்த சாட்சியும் 3 வாய்தாவுக்கு மேல் விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:04:07 +0530

As per Rule 106 of Criminal Rules of Practice

| S. No. | Name of the Police station | Description of the accused | | Date of | | Explanation of Delay |
|---|---|---|---|---|---|---|
| 1. | Arumbavur PS, Cr.No.99/2019 U/S.294(b), 324, 326 IPC Sec 4 of TNPHW Act. | Name | Karunanithi | Occurrence | 11.05.2019 | - |
| | | Father's Name | Govindaraj | Complaint | 13.05.2019 | |
| | | Occupation | Labourar | Apprehension | 13.05.2019 | |
| | | Residence | Ambethkar street, Vengalam, Veppanthattai Taluk, Perambalur District. | Release on bail | 13.05.2019 (SB) | |
| | | Age | 34/2019 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 11.03.2026 | |
| | | | | Closure of Trial | 11.03.2026 | |
| | | | | Sentence or Order | 16.03.2026 | |

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:04:13 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.

Judicial Form No.61 (See Rule 106)
IN THE COURT OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

JUDGMENT IN CALENDAR CASE NO. 284 OF 2019

ON THE FILE OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

Complainant Sundhari
Accused 1.Karunanithi S/o.Govindaraj
Offence U/S. 294(b), 324, 326 IPC Sec 4 of TNPHW Act.

Findings Acquitted
Sentence --

| **Serial Number** | **Description of the Accused** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **Name** | **Father's/ Husband's Name** | **Caste or race** | **Occupation** | **Residence** | **Age** |
| 1. | Karunanithi | Govindaraj | Male | Labourar | Vengalam | 34/2019 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **Occurance** | **Complaint** | **Apprehension or Appearance** | **Release on bail** | **Commencement of trail** | **Closure of trial** | **Sentence or Order** | **Explanation of Delay** |
| 11.05.2019 | 13.05.2019 | 13.05.2019 | 13.05.2019(SB) | 11.03.2026 | 11.03.2026 | 16.03.2026 | - |

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:04:20 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.